பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சி நரியனூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட வேண்டுமாய் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் தொகுதி, மேச்சேரி பேரூராட்சி, சாம்ராஜ்பேட்டையில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு மாணவர்களின் எண்ணிக்கையை கவனத்தில் கொண்டு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாலமலை ஊராட்சியில் மலைவாழ் மக்கள் 31 குக்கிராமங்களில் வாழ்கின்றனர். அந்த மலைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகளான சாலை, தெரு விளக்கு, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை போர்க்கால அடிப்படையில் அரசு விரைந்து செயல்படுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-2-2014) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

21. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு திருத்தம் செய்தது குறித்து 5-9-2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./I.M.(SC)/7-28-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச்

சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

23. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

24. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

25. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

*****

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்